**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS.93/2015 . நாள்.04.09.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சத்தியநாரயணன் | **வயது** | 67 |
| **த/பெ. க/பெ.** | பச்சியப்பமுதலி | **மதம்** | |
| **முகவரி** | அப்புக்கொட்டாய் | **தொழில்** | விவசாயம் |

**<u>வா.சா.1 ஆஜர். 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் வழக்கு தாக்கல் செய்வதற்க்கு முன்பாகவே பொதுப்பணித்துறையால் எனது நிலத்தில் வாய்க்கால் ஏற்ப்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் எனது நிலத்தில் செல்வது குறிப்பிடப்பட்டது என்று சொன்னால் என்னுடைய நிலத்தில் கால்வாய் கிடையாது. என்னுடைய நிலத்திலும் கால்வாய் செல்வதாக நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. கால்வாயானது பாலேகுழி ஏரியில் இருந்து வந்து வீரமலை ஏரிவரை செல்கிறது. இந்த கால்வாய் மூலமாக போச்சம்பள்ளி வட்டாரத்தில் உள்ள 28 ஏரிகளுக்கு தண்ணீர் செல்கிறது என்று சொன்னால் சரிதான். கால்வாய் அமைப்பதற்க்கு கால்வாய் செல்லும் நிலம் நிலத்தின் உரிமையாளர்களின் 70 சதவீத உரிமயாளர்கள் சம்மதம் தெரிவித்தால் பொதுப்பணித்துறை நிலம் ஆர்ஜிதம் செய்யாமலேயே கால்வாய் அமைத்து விட்டு பின்னர் நில ஆர்ஜிதம் செய்ய விதி உள்ளது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விதியின் அடிப்படையில் கால்வாய் அமைக்கும் பணியானது 10.05.2012 அன்று தொடங்கப்பட்டு 09.01.2014 ஆம் தேதி முடிக்கப்பட்டது என்று சொன்னால் அதுப்பொய்யாகும். எனது நிலத்தின் நான் கால்வாய் அமைக்கவிடவில்லை. கால்வாய் அமைத்த பிறகு நிலத்தின் உரிமையாளர்களை நிலம் ஆர்ஜிதம் செய்வது சம்மந்தமாக கூட்டம்போட்டு அந்த கூட்டத்திற்க்கு மற்ற நில உரிமையாளர்களும் நானும் சென்றேன் என்று சொன்னால் நான் செல்லவில்லை. மேற்படி கூட்டத்தில் கால்வாய் செல்லும் நிலத்தின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு எவ்வளவு தரவேண்டும் என்றும் மரங்களுக்கு இழப்பீடு

எவ்வளவு தர வேண்டும் என்று முடிவு செய்து தெரிவித்தார்கள் என்றும் சொன்னால் எனக்கு அந்த கூட்டத்திற்க்கு அழைப்பிதழே வரவில்லை. மேற்படி கால்வாய் அமைப்பதற்க்கு பொதுப்பணித்துறையால் உருவாக்கப்பட்ட வரைப்படத்தின் அடிப்படையிலேயே கால்வாயானது அமைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மாற்று வரைப்படத்தின் அடிப்படையில் தான் கால்வாய் உருவாக்கப்பட்டது.

2. மேற்படி கால்வாய் வழியாக தண்ணீர் தற்போதும் சென்று வருகிறது என்று சொன்னால் தண்ணீர் தற்போது போகவில்லை. G.O வளையம் எண். 32 PW(S2) தேதி.23.01.2014 தேதிய உத்தரவுப்படி 09.02.2014 ஆம் தேதி முதல் தற்போது வரை விவசாயத்திற்க்காக தண்ணீர் திறந்துவிடப்படுகிறது என்று சொன்னால் அது பொய்யாகும். யாரோ சில நபர்களின் தூண்டுதலின் பெயரில் மாற்று வரைப்படத்தின் அடிப்படையில் கால்வாய் அமைக்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஏற்கனவே குடுத்த கோரிக்கை மனுக்களில் கால்வாய் வெட்டப்பட்டுள்ளதாக கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு முன்னால் மற்றும் பின்னால் நிலத்தில் கால்வாய் செல்லும் உரிமையாளர்கள் நிலஆர்ஜித இழப்பீடை பெற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் பொதுப்பணித்துறைக்கு கொடுத்த மனுவின் பெயரில் வருவாய்துறை அதிகாரிகளுடன் நாகரசம்பட்டி உள்வட்ட அளவையர் உதவியுடன், கால்வாயானது அளக்கப்பட்டு சரியான வரைப்படத்தின் அடிப்படையில் தான் கால்வாய் கட்டப்பட்டுள்தாக அறிக்கை அளித்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கூட்டு புலத்தணிக்கை அறிக்கையில் மதிப்பீட்டின் அடிப்படையிலேயே கால்வாய் கட்டப்பட்டதாக குறிப்பிடப்பட்டது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கூட்டு புலத்தணிக்கையானது 29.10.2013 ஆம் தேதி செய்யப்பட்டது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு எதுவும் செய்யவில்லை. நான் அனுப்பிய மனுக்களுக்கும், சட்ட அறிவிப்புகளுக்கும் பிரதிவாதிகளால் உரிய முறையில் பதில் அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு பதில் எதுவும் அனுப்பவில்லை. அவ்வாறு பதில் அளிக்கப்பட்டுள்ளதை நானே ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் இரண்டு பதில்கள் எனக்கு அனுப்பபட்டுள்ளது. இரண்டு தேதிகளில் அனுப்பபட்டுள்ளது. மேற்படி கால்வாய் மூலமாக பலகிராம மக்கள்

பலன் அடைக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான்.

3. G.O.(நிலை) எண்.19 PW(W1 dt.04.01.2011) தேதிய உத்தரவுப்படி கால்வாய் பணி ஆரம்பிக்கப்பட்டு 04.01.2014 ஆம் தேதி பணி முடிக்கப்பட்டு G.O வளையம் எண்.32 PW(S2 dt:23.01.2014)–ஆம் தேதிய உத்தரவுப்படி மேற்படி கால்வாயில் தண்ணீர் ஆனது விவசாயத்திற்க்கு 09.02.2014 தேதி முதல் தற்போது வரை வழங்கப்பட்டது என்று சொன்னால் தண்ணீர் திறந்துவிடுகிறார்கள் ஆனால் எனது சொத்தில் செல்லவில்லை. எனவே நான் கேட்கும் பரிகாரமானது எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.